# வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
# காயல்பட்டணம்
## சக கல்வி பயிற்சி திட்டம் 27.04.2022

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 27.04.2022 புதன்கிழமை 11.15 மணியளவில் இளைஞர் செஞ்சுருள் சங்கத்தின் (RRC) சார்பாக சக கல்வி பயிற்சி திட்டத்தினை நடத்தினர். கல்லூரி முதல்வர் முனைவர் R.C. வாசுகி M.A., Ph.D., DGT இந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். மூன்றாமாண்டு கணிதவியல் மாணவி Z.A. ஜெய்னம்பு கிராத் ஓத இரண்டாமாண்டு ஆங்கில இலக்கிய மாணவி செல்வி பாத்திமா நசிரா வரவேற்புரை வழங்கினார்.இளைஞர் செஞ்சுருள் சங்கத்தின் உறுப்பினர் ஆங்கிலத்துறை உதவி பேராசிரியர் P. ராமலெட்சுமி M.A., M.Phil., சிறப்பு விருந்தினரை குறித்து தொகுப்புரையை வழங்கினார்.

கல்லூரியின் முதல்வர் முனைவர் R.C. வாசுகி M.A., Ph.D., DGTசிறப்பு விருந்தினருக்கு அன்பளிப்பு வழங்கியபின் சிறப்பு விருந்தினர் காயல்பட்டணம், அரசு மருத்துவமனை,ICTC Counsellorதிருமதி ஞ. புனிதா ஜோயல் M.A., அவர்கள் பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் பிரச்சனைகளை எப்படி எதிர்கொள்வது மற்றும் அந்த நேரத்தில் பெண்கள் எடுத்து கொள்ள வேண்டிய உணவுகள் பெண்கள் வருடத்திற்கு இரண்டு முறை இரத்த தானம் வழங்கும் முறை பற்றியும் தனது சிறப்புரையில் எடுத்து கூறினார்கள். இதனையடுத்து மாணவியரும் தங்களிடம் நிலவிய கேள்விகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக இளைஞர் செஞ்சுருள் சங்கத்தின் செயலாளர் கணிதவியல் துறையின் உதவிப்பேராசிரியர் திருமதி G. பத்மா கார்த்தியாயினிM.Sc., M.Phil., நன்றியுரை தெரிவிக்க, இறுதியாக துஆ ஓத நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவடைந்தது.